**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

முன்னிலை. **திரு.கா.நிலவரசன்,** B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 02-ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.4/2026**

ஷெகானாஸ் பேகம் – வாதி

-எதிராக-

அப்துல் சிக்கந்தர் மீரான்கான் – பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 12.01.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 19.06.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A.தியாகராஜ்** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், இந்நீதிமன்றத்தில் தோன்றாததால் ஒருதலபட்சம் ஆக்கப்பட்டு, வாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே கடந்த 10.01.2021 அன்று நாவலூர் ரெஜன்டா சென்டரல் ஆர் எஸ் மெரினா மாலில் நடைபெற்ற இஸ்லாமிய முறைப்படியான திருமணத்தை, பிரதிவாதி வாதிக்கு செய்த கொடுமை மற்றும் தன்னிச்சையாக பிரிந்து வாழ்ந்து வருவதன் காரணமாக திருமணம் முறிந்ததாக விளம்புகை செய்ய கோரியும் மற்றும் செலவு தொகைக்காகவும் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 10.01.2021 அன்று நாவலூர் ரெஜன்டா சென்ட்ரல் ஆர் எஸ் மெரினா மாலில் திருமணம் நடந்ததாகவும், அந்த திருமணம் 30.04.2021 அன்று திண்டிவனம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் திருமணம் ஆன நாள் முதல் பிரதிவாதி வாதிக்கு மன ரிதீயாக கொடுமைகள் செய்து வந்ததாகவும், மேலும் தன்னுடைய தாம்பத்திய கடமைகளை செய்யாமல் வாதிக்கு மன ரிதீயாக கொடுமைகள் செய்து வந்ததாகவும், மேலும் வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே தாம்பத்தியமும் நடைபெற வில்லை என்றும், எனவே

பிரதிவாதி தன்னிச்சையாக வாதியை தவிர்த்து வந்ததால், வாதி கடந்த 19.10.2022 முதல் பிரதிவாதியை விட்டு தனியே வாழ்ந்து வருவதாகவும், இருதரப்பு பெரியோர்கள் முன்பாக சமரசம் பேசப்பட்டும், வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே சமரசம் ஏற்படாததால், அவர்களின் திருமண உறவு முறிந்து விட்டதாகவும், மேலும் பிரதிவாதி தன்னிச்சையாக எவ்வித காரணமும் இன்றி வாதியை விட்டு பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் எனவே, மேற்கண்ட பரிகாரம் கோரி இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சம் ஆக்கியுள்ளார்.

4. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. வாதி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதம் தாக்கல் செய்யப்பட்டது. வழக்காவணங்கள் கவனத்துடன் பரிசீலக்கப்பட்டது.

**இத்தாவாவில் தீர்மானிக்கபட வேண்டியது யாதெனில், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

6. வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 10.01.2021 தேதியிட்ட வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோரின் திருமண அழைப்பிதழ், திருமண புகைப்படம் மற்றும் திருமண பதிவு சான்றிதழ் ஆகியவை முறையே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. மேற்கண்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆகிய சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில், வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர்களுக்கு இடையே கடந்த 10.01.2021 அன்று இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றுள்ளதும், அந்த திருமணத்தை திண்டிவனம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதும் தெரிய வருகிறது.

8. வாதியின் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தில், திருமணம்

நடைபெற்ற நாளில் இருந்து பிரதிவாதி வாதிக்கு கொடுமைகள் செய்து வந்ததாகவும், தாம்பத்திய கடமையை செய்யாமல் தவிர்த்து வந்ததாகவும், இருவருக்கும் தாம்பத்தியமும் நடைபெறவில்லை என்றும், எனவே பிரதிவாதி எவ்வித காரணமும் இன்றி தன்னிச்சையாக வாதியை தவிர்த்து வந்ததால், வாதி கடந்த 19.10.2022 முதல் பிரதிவாதியை விட்டு தனியே வாழ்ந்து வருவதாகவும், இரு தரப்பு பெரியோர்கள் சமரசம் பேசியும் வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர்களுக்கு இடையே சமரசம் ஏற்படுத்த முடியவில்லை என்றும், எனவே 10.01.2021 அன்று நடைபெற்ற திருமணத்தை மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் ரத்து செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

9. இந்நிலையில், பிரதிவாதிக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், இந்நீதிமன்றத்தில் தோன்றாமல் ஒருதலைபட்சம் ஆகியுள்ளார். எனவே பிரதிவாதி வாதி தரப்பு வழக்கை ஒப்புகொண்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது.

10. எனவே, வாதி தனது தரப்பு வழக்கை போதுமான சாட்சியம் மற்றும்

சான்றாவணங்கள் மூலமாக உறுதிப்படுத்தியுள்ள நிலையில், வாதியின் வழக்கை மறுக்கும் வகையில் பிரதிவாதி இந்நீதமன்றத்தில் தோன்றி எதிர் வியாஜ்ஜியம் செய்யாமல் ஒருதலைபட்சம் ஆகியுள்ளதால் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, இத்தாவாவை செலவு தொகையின்றி அனுமதித்து, வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோருக்கு இடையே 10.01.2021 அன்று இஸ்லாமிய முறைப்படி நடைபெற்ற திருமணம் ரத்து செய்யப்பட்டதாக விளம்புகை செய்து உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்த பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 02 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:—</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.ஷெகானாஸ் பேகம் (வாதி) |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:—</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.01.2021 | திருமண அழைப்பிதழ் |
| வா.சா.ஆ.2 | — | திருமண புகைப்படம் |
| வா.சா.ஆ.3 | 30.04.2021 | திருமண பதிவு சான்றிதழ் |

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்**